சமிக்கை ஆறு

Registered as a Newspaper

விலை ரூபா 5-00

Chunnakam Branch Library
Y.M.O.A.

# உதயன்

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 13 புதன்கிழமை (28-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 242

## திருநெல்வேலி, கோப்பாயில் நேற்றுப் பயங்கரம்

# 'சுப்பசொனிக்' குண்டு வீச்சில்

# ஐவர் உடல் சிதறி கருகிப் பலி!

## 4 மாணவர்கள் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான "எவ்-7" ரக 'சுப்பசொனிக்' குண்டுவீச்சு விமானங்கள் நேற்றுக் காலை திருநெல்வேலி, கோப்பாய்ப் பகுதிகளில் இரண்டு தடவைகள் நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சுச் சம்பவங்களில் நான்கு மாணவர்கள் உட்பட ஐவர் உடல் சிதறியும், கருகியும் பலியாகினர். எட்டுப்பேர் வரை படுகாயமுற்றனர். பல வீடுகள், கடைகள், ஆலயம் ஆகியவை உட்பட பெருமளவு உடைமைகள் சேதமடைந்தன.

"கறுப்பு ஜூலை" பத்தாண்டு நிறைவு தினமான நேற்று ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் இந்த அனர்த்தத்தைப் புரிந்தன.

இக் குண்டு வீச்சுக்களில் உயிரிழந்தவர்களின் சடலங்களும் காயமடைந்தவர்களின் உடல்களும் தீயில்கருகி எரிந்த நிலையில் காணப்பட்டன.

'சுப்பசொனிக்' விமானங்களின் பேரிரைச்சலாலும், குண்டு வீச்சுத் தாக்குதல்களினாலும் வலிகாமம் பகுதி முழுவதும் நேற்றுக் காலை இருதடவைகள் கலங்கியது. பதற்றமடைந்த மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர்.

குண்டுவீச்சு நடந்த தகவல் அறிந்து குடாநாடு முழுவதிலும் மக்கள் ஏக்கமுற்றுக் காணப்பட்டனர்.

(உ-5-162-17-15-72-143-111)

### ஐவரைப் பலி கொண்ட

## திருநெல்வேலித் தாக்குதலில் வயோதிபர், பேரன் மரணம்

### அதே குடும்பத்தில் மூவர் படுகாயம்

நேற்றுக் காலை 7 40 மணியளவில் திருநெல்வேலி இராச வீதியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் ஐவர் பலியாகினர் நால்வர் படுகாயமடைந்தனர்.

திடீரென வானத்தில் தோன்றிய இரு "சுப்பசொனிக்" விமானங்கள் பேரிரைச்சலுடன் யாழ். நகரப் பகுதியை சுற்றி வட்டமிட்ட பின்னர் திடீரென குத்திப் பதிந்து அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வீதம் இரு தடவைகளில் நான்கு குண்டுகளை வீசின.

திருநெல்வேலி இராச வீதியில், ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதிய அலுவலகத்துக்கு அருகில் — மக்கள் குடியிருப்புகள் மீது — மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் அப்பகுதி சுடுகாடானது; நான்கு வீடுகள் பெரும் சேதமடைந்தன.

முதல் இரண்டு குண்டுகள் விழுந்து வெடித்த சம்பவத்தில் நால்வர் பலியாகினர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் குண்டு வீச்சில் ஆஸ்பத்திரி சேதமுற்றது!

### நோயாளர்கள் சிதறி ஓட்டம்

நேற்று இரண்டாவது தாக்குதல் காலை 10 50 மணியளவில் கோப்பாய் மத்தி அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சமீபமாகவும் — கோப்பாய் தெற்குப் பகுதியிலும் நடத்தப்பட்டது.

முதல் வீசிய இரண்டு குண்டுகள் கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகில் விழுந்து வெடித்ததில் ஆஸ்பத்திரி ஓடுகள், ஜன்னல் கண்ணாடிகள் சிதறின; சில வீடுகள் சேதமுற்றன; சிகிச்சை பெற வந்த ஒருவர் காயமடைந்தார்.

வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற வந்திருந்த பல நூற்றுக்கணக்கான நோயாளர்களும், ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சுமார் 25 பேரும் குண்டு வீச்சினால் குழப்பமடைந்து, பதற்றமுற்று சிதறி ஓடினர்.

அடுத்த இரண்டு குண்டுகளும் கோப்பாய் தெற்கில் வீசப்பட்டன அதில் ஒரு குண்டு வெடிக்கவில்லை. ஒருவர் காயமடைந்தார்.

குண்டுகள் வீழ்ந்த இடத்தில் திடீரென தீப்பற்றியதுடன், அப்பகுதி புகைமண்ட

(2 ஆம் பக்கம் பார்க்க)

## குத்திக் கொண்டு வருகிறது என்று கூறி முடிக்கு முன் குண்டு விழுந்தது

யாழ்ப்பாணம், ஜூலை. 28

பாடசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த எனது பேரன், பேரிரைச்சலைக் கேட்டு வெளியே ஓடினான். வெளியில் நின்றுகொண்டவாறே "அம்மம்மா ஓடி வாங்கோ! இங்கே தான் சுப்பசொனிக் குத்தி[illegible] வருகிறது" என்[illegible] கூறி முடிப்பதற்குள் குண்டு ஒன்று எங்கள் வீட்டுக்கு மேலே விழுந்தது.

### கணவனையும் பேரனையும் இழந்த அன்னம்மா அழுதவாறு சொல்கிறார்

இவ்வாறு நேற்றுக்காலை திருநெல்வேலியில் நடந்த [illegible] பட்டிருக்கும் அன்னம்மா சண்முகநாதன் தெரிவித்தார்.

குண்டு வீச்சினால் தமது கணவனையும் பேரனையும் பறிகொடுத்த அன்னம்மா— ஐயோ தேநீர்கேட்ட என் பேரன் பச்சைத் தண்ணீரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சிதறிக் கிடந்த உறுப்புகள்

திருநெல்வேலிக் குண்டு வீச்சில் பலியான மாணவர்களின் அவயங்கள் அப்பகுதியில் நாலாபுறமும் சிதறிக் கிடந்தன

வீதியில் பல பகுதிகளிலும் கைகள், கால்கள் சிதறிக் கிடந்தன அருகில் தோட்ட வெளியில் இருந்து கை ஒன்று மீட்கப்பட்டது, பல அவயங்கள் சில நூறு யார் தூரம் வரை கூட வீசப்பட்டுக் கிடந்தன.

சிதறிக் கிடந்த உறுப்புக்கள் பின்னர் பொறுக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### சேதமடைந்த கோயிலினுள் சிறுவனின் சடலம்

திருநெல்வேலியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் கோவில் ஒன்று சேதமடைந்தது.

இராச பாதை வீதியோரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி வேல் முருகன் கோவிலே சேதமடைந்தது. சுவாமி உலா வரும் சிறிய மஞ்சரதமும் சேதமடைந்தது.

புனருத்தாரணம் செய்வதற்காக மூல விக்கிரகங்கள் 'பாலஸ்தாபனம்' செய்து வைக்கப்பட்டிருந்த சிறிய அறையும் சேதமடைந்தது. விக்கிரகங்கள் பாதிக்கப்படவில்லை.

இதேவேளை —

குண்டு வீச்சின் போது வீதியால் சென்று கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் சிறுவனின் சடலம் சிதறிய நிலையில் அந்தக் கோவிலுக்குள் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தது. (உ-5)

### உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருநெல்வேலிக் குண்டு வீச்சில் ஐவருக்கு அதிகமானோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் —

மேலும் சிலர் உடல் சின்னாபின்னமாகி உயிரிழந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது

ஒரு சிறுவனின் கால் துண்டு ஒன்று யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மற்றும் சம்பவம் நடந்த இடத்திலும் ஒரு தலைப் பகுதியும் கால் துண்டு ஒன்றும் நேற்று மாலைவரை கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

### மயானம் போல் காட்சி

நேற்று குண்டுவீச்சு இடம் பெற்ற பகுதிகள் மயானம் போல காட்சி தந்தன. தாக்குதல் நடைபெற்ற இடங்களில் நின்ற மரங்கள் கருகிக் காணப்பட்டன.

திருநெல்வேலியில் தாக்குதல் நடந்த இடத்தில் உள்ள மரங்களின் கருகிய இலைகளிலும், கட்டட இடிபாடுகளிடையேயும், வீதி ஓரங்களிலும் சதைத் துண்டங்கள் தொங்கிக் கிடந்தன.

### அடையாளம் காணப்படாத சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருநெல்வேலி குண்டு வீச்சில் உயிரிழந்த ஒரு சிறுவனின் சடலம் சிதறிய நிலையிலும், மற்றொரு சடலத்திற்குரிய கால் ஒன்றும் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. [உ]

### கோப்பாயில் மாணவி மயங்கினார்

கோப்பாயில் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்ற போது அருகில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மாணவி ஒருத்தி பீதியால் மயங்கி விழுந்தார்.

குண்டு வீச்சு நடந்த சமயம் இரண்டாம் தவணைப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் பரீட்சை நிலையத்தை விட்டு, வினாத்தாள்களுடன் எழுந்து நாலாபுறமும் சிதறி ஓடினர்.

### தூக்கி வீசப்பட்ட பெரிய கல்

கோப்பாயில் குண்டுவிழுந்த இடத்தில் இருந்து சிதறிய பெரிய கல் ஒன்று சுமார் நூறுயார் தொலைவுக்கு வீசி எறியப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பிரசவத் தாய் பதுங்கு குழியில்

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகில் குண்டு வீச்சு இடம்பெற்றதால், அவ்வேளை ஆஸ்பத்திரி பிரசவ அறையில் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த தாய் ஒருவர் உடனடியாக பதுங்கு குழிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

தொடர்ந்து 'சுப்பசொனிக்' விமானம் இரைச்சலுடன் பறந்ததால் குழந்தை பிரசவித்து இரத்தம் பெருகிய நிலையில் காணப்பட்ட அந்தப் பெண்ணுக்கு பதுங்குகுழியில் வைத்து மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டது.

### படையினரின் சடலங்கள் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூலை 28

மணலாற்றுத் தாக்குதலில் உயிரிழந்த 18 சிப்பாய்களின் சடலங்களை வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் நேற்று மாலை விடுதலைப் புலிகள் ஒப்படைக்கவிருந்ததாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்தார். (உ-6)

### கிளாலி படகு சேவை இன்று

யாழ்ப்பாணம், ஜூலை, 28

கிளாலி — பூநகரி படகு சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமில்டன் விரைவில் ஓய்வு! கூட்டுப் படைக்கு சிசில்

கொழும்பு, ஜுலை, 28 கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விரைவில் ஓய்வு பெறவிருக்கிறார்.

அவர் அவுஸ்திரேலியாவின் புதிய தூதராக நியமிக்கப்படவிருக்கிறார்.

கடந்த மே மாதம் அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதராக கான்பெராவில் பதவி ஏற்ற ஜெனரல் சிறில் ரணதுங்காவை இங்கிலாந்துக்கான தூதராக நியமிக்க இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

இம் மாற்றங்கள் இடம் பெறும் போது தற்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா கூட்டுப் படைகள் தளகர்த்தராகவும் —

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா புதிய இராணுவத் தளபதியாகவும் பதவி ஏற்கலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம அதிகாரிகள் பொறுப்பாளராக (Chief of Staff) பதவி ஏற்பார். (உ-எ-3)

## மண்ணெண்ணெய் விநியோகம்'

அரியாலை, ஜுலை. 28 வாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏழாவது தொடராக இரண்டு லீற்றர் மண்ணெண்ணெயை சங்கக் கிளைகள் மூலம் பாவனையாளர்களுக்கு இன்று புதன் கிழமை முதல் விநியோகிக்க உள்ளது. (த-17-162)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நரசிம்மராவ் அரசு இன்று கவிழும்?

## எதிர்க் கட்சிகள் ஓரணியில் போர்க் கோலம்

புதுடில்லி, ஜுலை 28 இந்தியாவில் ஆட்சியிலிருக்கும் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு பதவி கவிழும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ராவ் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகியது

இன்று இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது நரசிம்மராவ் தலைமையிலான அரசு தோல்வி யடையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும்—

பிரேரணையில் எதிர்க்கட்சிகள் வெற்றியீட்டினால் நரசிம்மராவ் அரசு பதவியிழக்க வேண்டிவரும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து — ராவ் அரசுக்கு எதிராக — வாக்களிப்பது என ஜனதா தள் [அஜித்சிங் பிரிவு] தீர்மானித்திருப்பதை அடுத்து காங்கிரஸ் அரசுக்கு மேலும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் தற்போது வாக்களிக்கும் தகுதி பெற்ற எம்.பிக்களின் எண்ணிக்கை 532 ஆகும். இவர்களில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 251 பேர்.

முன்னாள் பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான சமாஜவாதி கட்சியின் ஐந்து எம்.பிக்களும் பகுஜன் எம். பி. ஒருவரும் மற்றும் உதிரிக்கட்சிகளைச் சேர்ந்த நான்கு எம். பிக்களும் இன்றைய வாக்களிப்பின் போது காங்கிரஸ் அரசுக்கு சார்பாக — பிரேரணையை எதிர்த்து — வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி—

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து 260 வாக்குகள் விழக்கூடும் எனக் கணிக்கப்படுகிறது.

இதுவரை காலமும், பிரதமர் ராவின் சிறுபான்மை அரசுக்கு ஆதரவு நல்கி வந்த ஜனதா தள் (அஜித்சிங்) பிரிவின் 20 எம். பிக்களும் தற்போது ராவ் அரசுக்கு எதிராகத் திரும்பியிருப்பதால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 262 வாக்குகள் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சிகளான பாரதிய ஜனதா, ஜனதா தள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள், அ.தி.மு.க. ஆகியவை ராவ் அரசைக் கவிழ்ப்பதில் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்துக்கு பிரதமர் ராவ் பதிலளித்து உரையாற்றுவார். அதனையடுத்து பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடைபெறும்.

பிரதமர் ராவின் சிறுபான்மை அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டிருப்பதை அடுத்து—

ஆளும் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியா 4 விக்கெட்டுக்கு 300 ஓட்டங்கள்

கொழும்பு, ஜுலை 28 இலங்கைக்கு எதிராக கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் ஆரம்பமான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியின் போது இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 300 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நவ்ஜோத்சிங் சித்து — 82, வினோத் காம்ப்ளி ஆட்டமிழக்காமல் - 119 ஓட்டங்களைப் பெற்றனர்.

## சுவிஸ் அதிகாரி வருகை

கொழும்பு ஜுலை 28 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கு பின்னர் சுவிஸ் சென்ற இலங்கைத் தமிழர்களை மீண்டும் திருப்பி அனுப்பும் திட்டம் குறித்து ஆராய சுவிஸ் அரசின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் இவ்வாரம் கொழும்பு வரவிருக்கிறார்.

அகதிகளை திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை குறித்து அவர் இங்கு ஆராய்வார் என கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் தெரிவித்தது. (த-3)

---

## வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? உடல் மெலிவா? உடல் பருமனா? தலை முடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் வியாதி ளா? மாதவிடாய்க் கோளாறுகளா?

சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் கிடைக்கும்

தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை
பிற்பகல் 3 00 முதல் 6 00 வரை

டாக்டர் த. சிவானந்தன்
(D. A. M, R. A. M. P.)

### "சிவா வைத்தியசாலை"

384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு.

(26703)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## திட்டமிடல் அதிகாரி

(அனர்த்தங்கள், நிவாரணம். குடிசை)

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறிப்பிட்ட துறைகளில் அனுபவம், ஆற்றல், ஆங்கில அறிவு ஆகியனவுடைய பட்டதாரி விரும்பப்படுவர். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு 4 - 8 - 1993 க்கு முன் சேரும் படியாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை 6 - 8 - 1993 பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். தகைமைச் சான்றிதழ். நற்சாட்சிப் பத்திரம் ஆகியன நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்கொண்டு கடிதத் தொடர்புகள் வைத்திருக்கப்பட மாட்டாது.

- கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
27 - 07 - 1993

(சி-5529)

---

## SCIENCE COLLEGE

### விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

### 95 - A/L (விஞ்ஞானப் பிரிவு)

புதிய பிரிவு

ஆரம்பம்: 31 — 7 — 1993 (சனி)

- ★ 200 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
- ★ மாணவர்கள் வெள்ளிக்கிழமை (29-7-93)க்கு முன்னர் அனுமதியைப் பெற்று, உங்கள் அனுமதியை உறுதி செய்யவும்.
- ★ மேலதிக விவரங்களை நிறுவனத்தில் தொடர்பு கொள்ளவும்.

(சி-5625)

---

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவுரையும்

### திருவாட்டி இரத்தினா நவரத்தினம்

கல்விக் கடலாகவும், கருணையின் வடிவமாகவும், கடவுள் நெறி மறவாத தொண்டராகவும், கற்றோர்க்கு ஒரு கலங்கரை விளக்காகவும், தமிழ் சமயப் பண்பாட்டின் சின்னமாகவும், பெண்களிற் பெருந்தகையராகவும், புகழ் விரும்பாத ஆனால் புகழ் பூத்த தனி அரசியாகவும் விளங்கி, சைவநீதி உலகெலாம் விளங்க நூல் பல ஆக்கி, ஆங்கிலப் பேச்சு மூலம் அன்னியரைக் கவர்ந்து, ஆயிரம் பிறை கண்டு சேர். பொன் இராமநாதனின் இலட்சியங்களை இனிதே நிறைவு செய்த, குறை விலா நிறைவொளி குருபரனடி அடைந்தது.

அன்னார் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நினைவுரையும் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் 31 - 07 - 93 சனிக்கிழமை பி. ப. 2 00 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பழைய மாணவியர்

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி/5021)

---

## கோப்பாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லமாகக் காணப்பட்டது. சில நிமிட நேரம் அப்பகுதிகளும் புகையினால் சூழப்பட்டு படிப்படியாக கரும்புகை மேலெழுந்து வியாபித்தது.

குண்டு வெடித்த இடத்தில் ஆறு அடி ஆழமான கிடங்கு ஒன்று உருவாகியுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவதேவாலயத்தடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இந்துமதி (வயது 23), கோப்பாய் ஆஸ்பத்திரியடியைச் சேர்ந்த தர்மலிங்கம் அழகேசன் [வயது 23] ஆகியோரே இத் தாக்குதல்களின் போது காயமுற்றவர்களாவர்.

## திருநெல்வேலித்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் பதுங்கு குழிக்கு அருகில் இருந்த கந்தையா சண்முகநாதன் (வயது 60) என்பவர் தலை சிதறி அந்த இடத்திலேயே பலியானார். அவரது பேரனான பாலச்சந்திரன் அஜித் (வயது 6) படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானான்.

இந்தச் சம்பவத்தில் சண்முகநாதனின் மனைவி அன்னம்மா [பூமணி] (வயது 58), மகள் திருமதி பாலச்சந்திரன் சிலோசனாதேவி (வயது 32), பேர்த்தியான பாலச்சந்திரன் தனுஷியா [வயது 4] ஆகியோரும் காயமடைந்தனர்.

இக் குண்டு வீச்சுத் தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர். திருநெல்வேலி பாற்பண்ணை கொலனியைச் சேர்ந்த தங்கராஜா கஜேந்திரன் (வயது 9) என்பவரும் மற்றொரு மாணவனுமே கொல்லப்பட்டனர். மற்றைய மாணவனின் சடலம் அடையாளங் காணப்படவில்லை. வீதியால் வந்த மாணவர்களில் செ. செல்வகாந்தினி (வயது 11) என்ற சிறுமி உடல் முழுவதும் எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இரண்டாவது தடவையாக வீசப்பட்ட இரு குண்டுகள் இராச வீதியின் கிழக்குப் புறமாக—வீதியில் இருந்து சில நூறுயார் தொலைவில் உள்ள தோட்ட வெளியில் விழுந்து வெடித்தன. இதனால் மூதாட்டி ஒருவர் தலையில் காயமடைந்தார். வீடு ஒன்று சேதமடைந்தது. பல தாசமாகிய பனைமரங்கள் முறிந்தன.

---

# செய்திக் கொத்து

### பயிற்சி வகுப்பு

யாழ். மாநகர எல்லைப் பகுதியிலுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் எதிர் வரும் 2ஆம் தவணை பாடசாலை விடுமுறைக் காலத்தில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளன.

யுனிசெவ் உதவியுடன் மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி வகுப்புகளில் இதுவரை பயிற்சிகளைப் பெற்றிராத பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-162)

### சங்கக்கடை சனி, ஞாயிறு திறப்பு

வலி கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்கள் பாவனையாளர்களின் வசதிகருதி ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் சனிக்கிழமைகளில் அரை நாளும் திறந்து வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-11)

### தேங்காய்த் திருடர் கைது

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள தென்னந்தோட்டங்களில் தேங்காய் திருடிய ஐவர் பளை காவல் துறையினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். (க-117)

### நூலகப் கண்காட்சி

மாணவர்களின் வாசிக்கும் பழக்கத்தை தூண்டுவதற்காக கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இரண்டு நாள் நூலக கண்காட்சி ஒன்று நடைபெற்றது. (க-152)

### புதிய ஆலயம்

தென் புலோலி சாரையடியில் ஆரோக்கிய அன்னை என்ற பெயரில் சிற்றாலயம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### நூலகங்களுக்கு புதிய நூல்கள்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய், பண்டத்தரிப்பு பொதுசன நூலகங்களுக்கு புதிய நூல்கள் பல கொள்வனவு செய்யப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (க-152)

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சண்முகம்

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், தற்போது 18/2 விதானையார் வீதியில் வசிப்பவருமாகிய வேலுப்பிள்ளை சண்முகம் காலமாகி விட்டார்.

இவர் மீனாட்சியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சடகோபன் (சண்முகா றேட்ஸ் சென்ரர்) னின் அன்புத் தந்தையும், யமுனராணியின் அன்பு மாமனாரும், காலஞ் சென்ற பாக்கியம் தருமலட்சுமி, காலஞ் சென்ற கந்தசாமி, அன்னமுத்து, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிகுமார், ராஜ்குமார், தயாழினி, ஜெயகுமார், தனுசியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்ற செல்லப்பா, திருநாவுக்கரசு, விசாலாட்சி, காலஞ் சென்ற சண்முகராசா, தம்பிராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இளங்கோவனின் (பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர், ஊர்காவற்றுறை) சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று புதன் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்
ச. சடகோபன் (மகன்)
க. இளங்கோவன் (பெறாமகன்)

18/2 விதானையார் வீதி,
கண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

26707

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்

# அதிபர் திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி

## நற்சேவை நயப்பிதழ் 28–07–1993

## இவர்கள் பாராட்டி வாழ்த்துகிறார்கள்

### வடமாநில பிரதிக் கல்விப்பணிப்பாளர்

*கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக — என்பது வள்ளுவர் வாக்கு*

இன்றைய கல்வி உலகில் இவ்வள்ளுவன் வாக்கு எவ்வளவு உண்மையோ தெரியாது. ஆனால் திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி அவர்களைப் பொறுத்தமட்டில் வள்ளுவன் வாக்கு சாலவும் பொருந்தும்.

பட்டதாரி ஆசிரியராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 25 வருடங்கள் சேவையாற்றிய பின் 1981ஆம் ஆண்டு யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் அதிபராகப் பொறுப்பேற்று திறம்பட சேவையாற்றியவர் திருமதி கிருஷ்ணசாமி அவர்கள்.

இவர் அதிபராக நியமிக்கப்படும்போது ஆரம்பப் பாடசாலையாக இருந்த யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், இவரது அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் சிறிய நிர்வாகத்திறனாலும் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இவரது சேவைக் காலத்தில் இப்பாடசாலை மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் பலமுறை முதலிடத்தைப் பெற்றது.

திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமியைக் கல்வி உலகில் தெரியாதவரும் இல்லை; மதிக்காதவருமில்லை, இவர் சுறுசுறுப்பாகச் சேவையாற்றி இவ்வருடம் ஜூன் மாதத்தில் ஓய்வுபெற்றுள்ளார் இவரது கல்விச்சேவையை நிச்சயம் மாணவருலகமும், பெற்றோரும் வாழ்த்துவர் என்பது திண்ணம்.

இவரது சேவைநலன் பாராட்டிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

துரை. தியாகராஜா,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்.

யாழ். கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

### பிரதிக் கல்விப் பணிப்பாளர்

அதிபர் திருமதி கிருஷ்ணசாமி அவர்களின் சேவையை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆளுமைமிக்க அதிபராகவும் கற்றல் கற்பித்தல் முன்னேற்றமடைய தன்னை அர்ப்பணித்து முழு நேர ஊழியராக உழைத்தவர். அவருடைய பெருமை சமகால அதிபர்களுக்கு ஓர் வழிகாட்டியாகவும், மாணவர் உலகத்துக்கு சிறந்த ஆசானாகவும் இருந்து ஓய்வு பெற்றவர். அவருடைய சிறப்பு மிக்க சேவை எல்லோருக்கும் உகந்தது.

பாடசாலையை நல்ல முறையில் ஒழுங்குபடுத்தி சகல துறைகளிலும் மாணவர்களுடைய கல்விக்கு ஊக்கமளித்து வெற்றி கண்ட ஒரு சில அதிபர்களில் திருமதி கிருஷ்ணசாமியும் அடங்குவார். கடமை உணர்வுடனும், விசுவாசத்துடனும் செயற்பட்டு தான் பொறுப்பேற்ற பாடசாலையை வளர்த்து சகலரதும் பாராட்டுக்குரியவரானார். இவரது சேவையைப் பாராட்டி விழா எடுப்பதை இட்டு பெருமைப்படுகின்றேன்.

இ. சிவானந்தன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மருதனார்மடம்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

### அன்னை துர்க்கா துரந்தரி

*''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்''*

ஆம்! கல்விப் பணியில் சிறந்த ஒரு கர்ம யோகியாக விளங்கியவர் திருமதி கிருஷ்ணசாமி அவர்கள். இவர்களின் சேவைக் காலம் சிந்மய பாரதி வித்தியாலயத்தின் ஒளிமயமான காலம் என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கு மஞ்சாத நிலைமையும் கொண்ட ஒரு பெண் அதிபராக விளங்கியவர் இவர். ஒருமுறை இவ் வித்தியாலய விழா ஒன்றுக்குச் சென்றிருந்தேன். நேர ஒழுங்கு; மாணவர் அமைதி; எம்மை உபசரித்த மகிமை; கடமையின் கண்ணியம்; பாடசாலைச் சூழலின் புனிதம்; அத்தனையும் என்னை வியப்படையச் செய்து விட்டன.

எத்தனையோ பெரிய கல்லூரிகளில் காணமுடியாத ஒரு கட்டுப்பாட்டையும் கடமையுணர்வையும் அங்கு கண்டேன். இத்தனைக்கும் அதிபரின் ஆளுமைதான் முதற் காரணமாக அமைகிறது என்பதைப் புரிந்து கொண்டேன்.

கல்விப்பணி என்பது ஒரு சமூகப்பணி. அதனை ஒரு தெய்வப் பணியாக மேற்கொள்ள வேண்டிய கடமை கல்விசால் புலமையாளர்கள் அனைவருக்கும் அமைய வேண்டும். இந்த வகையில் திருமதி கிருஷ்ணசாமி அவர்களை நான் பெரிதும் பாராட்டி ஆசி கூறுகிறேன். அன்னாரின் ஓய்வுக் காலமும் எமது சமூகத்துக்கு உதவும் காலமாக அமையட்டும் என்று வேண்டி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி.

தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### வித்தியாலய அதிபர்

சான்றோர் சால்பு மண்ணைப் பசுமையாக்கும்; மக்கள் உள்ளத்தைச் செழுமையாக்கும். சுதுமலையூரின் சிந்மயபாரதி வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக கடந்த பன்னிரண்டு ஆண்டுகள் அரும்பாடுபட்டு உழைத்தவர் திருமதி ஜெ. கிருஷ்ணசாமி அவர்கள். அவரின் தன்னலமற்ற சேவையே அவரை மாவட்டத்தின் சிறந்த அதிபர்கள் வரிசையில் வைத்துப் பேசுமளவிற்கு பிரபல்யமாகியது. அன்னாரின் செயற்றிறன் செப்பரியது. பழகுவதற்கினியவர்; நல்லவர்; வல்லவர்; அவரின் சேவையை வித்தியாலயம் போற்றுவதோடு, அவர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று நல்லாரோக்கியத்துடன் வாழ்வதற்கு சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அருள்பாலிப்பாராக!

திருமதி சு. ஜெயவீரசிங்கம்

## தன் நலன் கருதாது மாணவர் நல்வாழ்வுக்காக உழைத்தவர்

நிமிர்ந்த நன்னடை; நேர் கொண்ட பார்வை; நெஞ்சில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்; நிமிர்ந்த ஞானச் செருக்குமுடையவராகக் கடந்த பன்னிரெண்டாண்டுகளாக சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் அதிபர் ஆசனத்தை அலங்கரித்தவர் தான் திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி அவர்கள்.

சுதுமலை செய்த தவத்தின் பயனாக அவர் இப்பாடசாலைக்கு அதிபராக வந்து பதவி ஏற்றார் எனக் கூறுவது மிகையான கூற்றன்று.

என்றைக்கு அவர் இப்பாடசாலையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டாரோ, அன்றே அவர் உள்ளத்தில் ஓர் இலட்சியம் குடி கொண்டது. அது தமது நிர்வாக கால எல்லைக்குள் இவ் வித்தியாலயத்தின் பெயரை விளக்க வைக்க வேண்டும் என்பதாகும். தான் கொண்ட இலட்சியத்தை நிறைவேற்றிப் பூரணப்படுத்துவதற்காக அவர் இராப்பகலாக உழைத்தார். அதற்காக அவரது மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி ஆகியவை மாறிமாறி ஓடிக் கொண்டிருந்தன. கட்டடங்கள் எழுந்தன. மாணவர் எண்ணிக்கை பெருகியது. ஆசிரியர் எண்ணிக்கை அதிகரித்தது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரம் வரை வகுப்புகள் அமைக்கப்பட்டன. அவரது வாகனங்களின் வேகம் போலப் பாடசாலையின் வளர்ச்சியும் வேகம் கண்டது.

### ஒழுக்கம் முக்கிய குறிக்கோள்

ஒரு வித்தியாலயத்தின் வளர்ச்சி என்பது உயர்ந்த கட்டடங்களிலோ, மாணவர் ஆசிரியர் எண்ணிக்கை அதிகரிப்பிலோ, கல்வியின் முன்னேற்றத்திலோ மட்டும் தங்கி இருக்கவில்லை. ஒழுக்கம் என்னும் கட்டமைப்பிலேதான் வளர்ச்சி தங்கி இருக்கிறது என்பது திருமதி கிருஷ்ணசாமி அவர்களது உறுதியான நம்பிக்கை. அதனால் வித்தியாலயத்தின் ஒழுக்கத்தை — கட்டமைப்பை உருவாக்க பெரிதும் பாடுபட்டார்.

*''ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்*
*ஓதலிற் சிறந்ததன்(று) ஒழுக்கமுடைமை''*

என்னும் முதுமொழிக் காஞ்சி உரையை மாணவரிடத்தும் ஆசிரியர்களிடத்தும் பதிய வைத்தார். ஒழுக்கம் என்னும் கட்டடத்தைக் கட்டியெழுப்ப அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் கண்டிப்பானவையாக மிளிர்ந்தன. அதனால் இவ் வித்தியாலயம் ஒழுக்கத்தால் விழுப்பம் பெற்றது.

அதிபர் அவர்களுடைய விடாமுயற்சி காரணமாக முன்னணிப் பாடசாலைகளுக்கும் சென்றுவிடத் தேங்கி நின்ற மிகுதி மாணவர்களை கற்பித்து க.பொ.த (சாதாரண) பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறும்படி



*வாழிய வையக மீதினில்*
*வாழிய வாழிய நீடு*
*பல்லாண்டுகள்:*

யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய அதிபராக
12 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வுபெறும்

**திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி**
(B.A., Dip - in - Ed.)

**வாழ்க**

''சீரான கல்வியும் சிறப்பான சேவையும்
சிந்மய பாரதியில் ஆல்போல் வளர்ந்து
அதிபராய் நின்று
இன்னூறெனும் பேறுகண்ட உன் வழி
தோன்றல் வாழியவே''.

வகுப்புகள் அதிகரித்தமை போலவே கல்வித் தரமும் அதிகரித்தது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் ஏனைய முன்னணிப் பாடசாலைகளுக்குச் சற்றும் குறையாத பெறுபேறுகளைப் பெற்றது அப்பெறுபேறுகள் காரணமாக மாணவர் தேசிய மட்டப் பாடசாலைகளுக்கும் யாக வைத்த பெருமை அதிபர் அவர்களையே சாரும், ஆறு, ஐந்து என்று விசேட சித்திகளை மாணவர்கள் பெற்றுத் தேறியமை அவரது சாதனைக்கு எடுத்துக் காட்டாகும்.

இன்னும் தமிழ்த் தினப் போட்டியிலும் ஏனைய போட்டிகளிலும் இவ் வித்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொத்தணி அதிபர் பார்வையிலே...

திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு பிரபலமான அதிபராக மானிப்பாய் கோவிற்பற்றில் ஒரு தசாப்தத்திற்கு மேல் விளங்கினார்.

உடுவில் மகளிர் கல்லூரியில் படித்துப் பின் பட்டம் பெற்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட இவர் புவியியல், ஆங்கில பாடங்களை மிக லாவகமாகக் கற்பித்து மாணவர்களாலும் பெற்றோராலும் விருப்பத்திற்குரியவராகத் திகழ்ந்தார்.

அந் நேரத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக விருந்த செல்வி பத்மாசனி ஆறுமுகம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அதிபராக பொறுப்பெடுத்துக் கொண்டார். இப்பாடசாலை ஓர் ஆரம்ப பாடசாலையாகவே இருந்தது இங்கு திருமதி ஜெ. கிருஷ்ணசாமி அதிபராக நியமனம் செய்யப்பட்டபின் இப் பாடசாலைக்கு ''வெள்ளிதிசை'' தொடங்கியது. இன்று யாழ். மாவட்டத்திலேயே ஒரு சிறப்பான பாடசாலை என்ற நிலைக்கு உயர்த்திச் சென்றார்.

ஆண்டு 11வரை வகுப்புகளும் அதிகரித்தது. இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் வித்தியாலயத்தின் வெற்றிகள் அதிகரித்தன இன்று மாவட்ட மட்டத்தில் ஏனைய பாடசாலைகளுக்கு சளைக்காத வகையில் ஒரு பெயரை இப்பாடசாலை பெற்றுள்ளது.

திருமதி ஜெ கிருஷ்ணசாமியின் விடாமுயற்சியினால் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும், க. பொ. த சாதாரண தரப் பரீட்சையிலும் இவ் வித்தியாலய மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள்.

### சிறந்த அதிபர்

மானிப்பாய் கொத்தணிச் சபையில் சிறந்த அதிபராகச் செயற்பட்டு விடுக்கப்படும் பணிப்புரைகளை மிகவும் நேர்த்தியாக நடைமுறைப் படுத்தி இலகுவான நிர்வாகத்திற்கு உதவியாக விளங்கினார்.

இவருடைய ஈடில்லா, நிகரற்ற உழைப்பினால் சுதுமலை சிந்மய பாரதி இன்று ஓங்கி உயர்ந்து வளர்ந்துள்ளது.

இவர் தனது இளைப்பாறிய காலத்தில் சகல சுகபலத்துடனும் அமைதியான வாழ்வு பெற இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

- திரு. செ. கேசவராஜன் -
கொத்தணி அதிபர், மானிப்பாய்

(விளம்பர இல: 26690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கச்சான் கோது உடைக்கும் மெஷின். புத்தம் புதிய கச்சான் உடைக்கும் மெஷின் (பருப்பு வேறு கோது வேறாக் கக்கூடியது) உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மாவிட்டபுரம்.
(26691)

நல்ல நிலையிலுள்ள 4K.V. English Dynamo விற்பனைக்குண்டு. தொடர்பு இல. 51, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (26701)

...சென்ட்மாஸ்ரர் ட்ரெயி... மட்டும் விற்பனைக்குண்டு. பார்வையிடலாம்: மணியம் (333) 285, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(26684)

புதிய முதிரைப் பலகைகள் விற்பனைக்குண்டு. அகலம் 12 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை. விலை சதுர அடி ரூபா 110/- முதல் ரூபா 130/- வரை. புதிய பாலை, முதிரை நிலைகளும் விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி), திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். [26685]

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
(6366)

### உடன் விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்ந்த லைலன் பிறவுன் சேவல் குஞ்சுகள், இரண்டு கிழமைகள் வளர்ந்த புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மாணிப்பாய். [26686]

### மணமகள் தேவை

விசாகம் தோஷமற்ற 31 வயதான A/L சித்தியுடன் பத்து வருடங்களாக ஜேர்மனியில் நிரந்தர தொழில் புரியும் தொழில்நுட்பவியலாளருக்கு தகுதியான மணப்பெண் தேவை. Sponser செய்து அழைக்கலாம். ஜேர்மனியில் தொடர்புள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். இல. 543, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26653)

### தவறிவிட்டது

இ. தேவராஜா என்பவருடைய ஏசியா சைக்கிள் (பச்சை) கலட்டி அம்மன் கோயில் முன்றலில் தவறிவிட்டது. இது பற்றி தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். சோபனா ஆடை அகம், 16, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி-5621)

### சோதிடம்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க; குழந்தைகளுக்கு பெயர் வைக்க, உங்கள் எதிர்காலம் பற்றி அறிய வேலணை சோதிடர் V. A சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர்மடம்.
(26688)

### ஆண்டு - 4 வகுப்பு

1994 ஆகஸ்ட் புலமைப்பரிசில் மாணவருக்கு (ஆண்டு-4) அடிப்படையில் இருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இணைய விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அனுமதிப் பரீட்சை 31-07-93 பிற்பகல் 3 மணி. ஆரம்பம் 01-08-1993 எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
(26700

### விவாக சேவை

யாழ்ப்பாண பாரம்பரிய வழமைக்கேற்ப உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களை தெரிவு செய்ய ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (26660)

---

**BOND**

**கல்வியகம்**

**A/L 95**

Chemistry

திரு. மகாதேவா

சனி — ஞாயிறு

9 00 A. M

அனுமதிக்கான இறுதி நாள்

31—07—93

வகுப்பு ஆரம்பம்:

01—08—93

[26695]

---

**விக்னா கல்வி நிறுவனம்**

பிரத்தியேக வகுப்பு

**94**

அலகு ரீதியான

வினா-விடை மீட்டல்

கணக்கியல்

ஆரம்பம்:

01-08-1993

2.00 – 4.00

S.K. பிரபாகரன்

(சி-5520)

---

## தந்தையின் சமாதியில் அனுரா அஞ்சலி

சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள அனுரா பண்டாரநாயக்க கடந்த சனிக்கிழமை ஹொரகொல்லையில் உள்ள அவரது தந்தை பண்டாரநாயக்காவின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

தமது தாயாருக்கும் சந்திரிகாவுக்கும் எதிராகக் குற்றஞ் சுமத்தவே அவர் அங்கு சென்றுள்ளார் என்று செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார். (ஓ-6)

---

**BECON**

**கல்வி நிறுவனம்**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 94**

(1 வருட வகுப்பு)

சனி, ஞாயிறு வகுப்புகள்

பொருளியல் —
S. வரதராஜன்
11-00 — 12-00

அளவையியல் —
S.S. மனோகரன்
8-00 — 9-00

கணக்கியல் —
ஸௌந்தி
10-00 — 11-00

வர்த்தகம் —
பசில்
12-00 — 1-00

தமிழ் —
திருமதி மீரா
10-00 — 11-00

இந்து நாகரிகம் —
பாலா
7-00 — 8-00

புவியியல் —
ஜோசப்
9-00 — 10-00

கிறிஸ்தவம் —
நிரஞ்சன்
7-00 — 8-00

ஆரம்பம்:
01-08-93
ஞாயிறு

(சி-5622)

---

**விக்னா**

**கல்வி நிறுவனம்**

94

அலகு ரீதியான

வினா - விடை மீட்டல்

ஆரம்பம்:

01 - 08 - 1993

9-00 மணி

பொருளியல்—
திரு. கலாகரன்
12 - 00 — 1 - 30

வர்த்தகம்—
திரு. தேவா
10 - 00 — 11 - 00

கணக்கியல்—
திரு S. K. பிரபாகரன்
2 - 00 — 4 - 00

அளவையியல்—
திரு. விக்கி
11 - 00 — 12 - 00

தமிழ்—
திரு. குழந்தை
10 - 00 — 11 - 00

இந்துநாகரிகம் - சமயம்—
திரு. காரைசுந்தரம்பிள்ளை
12 - 00 — 1 - 00

புவியியல்—
திரு. குணராசா
9 - 00 — 10 - 00

அரசியல்—
திரு. ஜெயகாந்தன்
9 - 00 — 10 - 00

வரலாறு—
திரு. சிறிதரன்
1 - 00 — 2 - 00

(சி/5523)

---

## தன் நலன் கருதாது...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
யாலயம் பாராட்டும் படியான சாதனைகளை ஈட்டுவதற்கு அதிபர் அவர்களுடைய அயராஉழைப்பே காரணமெனலாம்.

**இறைபக்தி**

பகவான் ஸ்ரீசத்ய சாயிசன் பேரில் பூரண பக்தி கொண்டவரான அதிபர் அவர்கள் பகவானின் பஜனைகளைப் பாடசாலையில் மாதந்தோறும் நடத்தி வந்திருக்கிறார்.

பாடசாலையின் முன்னேற்றம், கிராமத்தின் சுபீட்சம், சாந்தி, சமாதானம் என்பனவற்றிற்காக இப்பிரார்த்தனைகளை நடத்தி வந்த ஒரு ஞானயோகி அவர். ஆம் கர்மயோகியாகவும், பக்தியோகியாகவும் அவர் திகழ்ந்தமையை முந்திய பந்திகளில் குறிப்பிட்டோம். இன்னும் சைவ நாயன்மார் குருபூசைகள், நவராத்திரி என்பனவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். எதுவாக இருந்தாலும் பெருவிழாவாகக் கொண்டாடும் பேரார்வம் மிக்கவர். சமீபத்தில் மாணவர் தலைவர்களுக்குப் பட்டிகளை வழங்கிய வைபவத்தைக் கூடப் பெருவிழாவாகவே எடுத்தார்.

**கடமையே கண்ணானவர்**

அதிபர் அவர்கள் கடமையே கண்ணானவர். போற்றினும் சரி, புழுதிவாரித் தூற்றினும் சரி தான் கொண்ட கொள்கையிலிருந்தும் பின் வாங்கமாட்டார். அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் நன்மைகளைப் பயந்த போது தூற்றியவர்களும் போற்றிய சம்பவங்களுமுண்டு. அதிபர்களுக்குள்ளே இவர் வித்தியாசமானவர். இருபத்து நான்கு மணித்தியாலங்களையும் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகவே அர்ப்பணித்த கர்மயோகி இவர். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். இத்தகையோர் இருப்பதாலேயே இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்கிறது. "உண்டால் அம்ம இவ்வுலகம்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் இத்தகையவர்கள் வாழ்வதே நாடென்பதை.

"நாடா கொன்றோ
காடா கொன்றோ
அவலா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை
வாழிய நிலனே"

எனப் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார் ஔவையார் என்னும் பெண்பாற் புலவர். அதிபரைப் போன்ற செயல் வீரர்களால்தான் உலகம் சிறக்கின்றது. சுதுமலைக் கிராமமும் கல்வி கேள்விகளால் சிறப்புறுவதற்கு அதிபரின் அர்ப்பணிப்பே காரணமாகும்.

"பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்றபடி அதிபர் அவர்களின் பெருமைக்குச் சான்றாக இவ் வித்தியாலயம் தன் பெயர் விளங்கி நிற்கின்றது. "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் பெறப்படுமல்லவா?" அந்த வகையில் இவ் வித்தியாலயத்தின் பரிபூரணமான வளர்ச்சியாகிய "எச்சம்" அதிபரைத் தக்கவராக்கி டள்ளமையை அனைவரும் அறிவர்.

எல்லாம் வல்ல இறைவன் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து பயன் தருவதற்கு நல்லருள் வழங்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்திக்கிறோம்.

★

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர்,
பழைய மாணவர்கள்,
நலன்விரும்பிகள்.

---

## வாழ்த்துகிறோமம்மா!

கல்விகலை வளர்ச்சியே கருத்திற் கொண்டு
கலாசாலை மாணவர்க்கு அன்பு கொண்டு
நல்விதம்சேர் பண்பாடு பண்பு எல்லாம்
நயம் பெறவே ஊட்டிவைத்த அதிபர் நீயே
வல்லமைசேர் திருமதி ஜெ. கிருஷ்ணசுவாமி
வாயார வாழ்த்தி நின்றோம் சேவை தன்னை
சொல்லு செயற் கடமை நேர்மைகொண்ட தாயே
சிற்மயபா ரதிவாழ்த்திப் போற்றுமம்மா

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்,
பழைய மாணவர், மாணவர்கள்.

---

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 09 — 09 — 1933 | 17 — 07 — 1986 |

திருமதி

**யோகம்மா சுப்பிரமணியம்**

(முன்னாள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியை)

திதி: 28—7—1993

அம்மா! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், தாய், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

"யோக பவனம்",
மருதடி, சாவகச்சேரி.

(6366)

---

## 45ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 02 — 02 — 1936 | 14 — 06 — 1993 |

அமரர்

**வேதுறுப்பிள்ளை கபிரியேல்பிள்ளை**

(செல்வரெட்ணம்)

எமது குடும்பத்தின் இனிய தலைவனாக வாழ்ந்து 14 - 6 - 1993 இல் இறைவனடி சேர்ந்த வேதுறுப்பிள்ளை கபிரியேல்பிள்ளை (செல்வரெட்ணம்) யின் இறுதிச் சடங்கிலும், 7 ஆம் நாள் வைபவத்திலும், 31 ஆம் நாள் இரங்கல் திருப்பலியிலும், வீட்டு வைபவங்களிலும் கலந்தும், புத்தகம் வெளியிட்டும், இரங்கல் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும், இரங்கல் செய்திகள் அனுப்பியும், மலர்வளையங்கள் சாத்தியும், அஞ்சலி உரைகள் ஆற்றியும், ஆறுதல்கள் கூறியும், உணவு வகைகள் வழங்கியும், உதவிகள் பல புரிந்தும், எம்மைத் தேற்றிய பல்கலைக்கழகத்தினர், கொக்குவில் இந்துக் கல்லூரியினர், இலங்கை வங்கியினர், மக்கள் வங்கியினர், சென்றலைட் விளையாட்டுக் கழகத்தினர், புனித நீக்கிலஸ் சனசமூக நிலைய நிர்வாகிகள், ஒப்பாரிக் குழுவினர், இளைஞர், மகளிர், கடற்றொழில் மன்றங்கள், மரியாயின் சேனையினர், 8 மணித் திருமணித்தியாலக் குழுவினர், நாவாந்துறை றோ.க.த.க.வித்தியாலயத்தினர், செபவழிபாட்டுக்குழுவினர், வண.குரவர்கள், வண. சகோதரிகள், பீட பரிசாரகர்கள், விளையாட்டுத்துறை நண்பர்கள், உற்றார் உறவினர் யாவர்க்கும் எமது இதயம் கனிந்த நன்றி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி மே. கபிரியேல்பிள்ளையும்,
குடும்பத்தினரும்.

83, நாவாந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(26666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இராணுவத் தீர்வின் வடிவம் இதுவே!

பல நாள் இடைவெளியின் பின்னர், குண்டு வீச்சு சுப்பர் சொனிக்) விமானங்கள் நேற்று யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதியில் வட்டமிட்டு உறுமின. ஒரு தட்வைக்கு இரு தட்வைகள் வந்து குண்டுகளைத் தள்ளி தமிழ்ப் பொதுமக்களை கொன்றன.

மணலாறு மண்கிண்டிமலையில் ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய பெருந் தாக்குதலில் ஆயுதம் தாங்கிய கிராமக் காவலர்கள் பதினேழு பேரும், 53 படையினரும் பலியானதற்குப் பழி வாங்கும் நோக்குடனேயே நேற்றைய குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என அனுமானிக்கலாம்.

ஏனெனில் குடா நாட்டின் எந்தப் பகுதியிலும் இராணுவம் முன்னேறும் முயற்சிக்கான தாக்குதல் எதுவும் நடக்கவில்லை. அதனால் இராணுவத்துக்கு உதவும் பொருட்டு விமானப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறுவதற்கு இடமில்லை.

1983 கறுப்பு ஜூலையின் பத்தாண்டு நிறைவு காலத்தில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுத்துறை எச்சரித்திருந்தது. அதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி கொழும்பிலும் படையினர் உஷார் நிலையில் — தயார் நிலையில்— விழிப்புடன் இருக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

ஆனால் மணலாற்றில் விடுதலைப் புலிகள் தமது அதிரடித் திறமையைக் காட்டிவிட்டார்கள். இராணுவம் தனக்கு ஏற்பட்ட தோல்வியைக் சீரணித்துக் கொள்ளமுடியாமல், படையினர் துயின்று கொண்டிருந்தபோது புலிகள் தாக்கினார்கள் என்று ரூபவாகினி மூலம் சிங்களவருக்கு நியாயப்படுத்த முனைந்தது. மணலாற்று முகாமில் இருந்து புத்தளத்துக்குப் பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் அனுப்பப் பட்டுவிட்டதால் தான் விடுதலைப் புலிகள் வெல்ல முடிந்தது என்ற அர்த்தத்திலும் தகவல்களை வெளியிட்டது.

ஆனால் தம்மில் மொத்தம் 53 பேர் பலியானதற்கு நிராயுதபாணிகளான தமிழர்களைப் பழிவாங்கும் நோக்குடனேயே நேற்று குண்டு வீச்சு விமானங்கள் குடாநாடு வந்தன. நேற்றைய தாக்குதல்களில் இறந்தவர்கள் பொதுமக்கள். சேதமடைந்தவை பொதுமக்களின் சொத்துக்கள்.

நேற்றைய குண்டு வீச்சும், மாத்தறை நகரில் தமிழ் தொழில் அதிபர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவமும் எதனைக் காட்டுகின்றன? தம்மவரின் இழப்புக்காக அப்பாவித் தமிழர்களை — நிராயுதபாணிகளான தமிழர்களைப் — பழிவாங்கும் மனப்போக்கும் அட்டூழிய எண்ணமும் பத்து வருடங்கள் கழிந்தும் இராணுவத்தினரிடமிருந்து நீங்கவில்லை என்பதையே!

எத்தனை விசாரணைக் குழுக்கள், ஆணைக்குழுக்கள் வைத்து இராணுவத்தினர் தமிழ்ப்பொதுமக்கள் மீது பழிவாங்கும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று அறிக்கைகள் வெளியிட்டும் என்ன பயன்? அவர்கள் கொண்ட குணத்தையும் கோலத்தையும் மாற்ற முடியாது!

கறுப்பு ஜூலை நடந்து பத்து வருடங்களாகியும் அதன் பத்தாவது நிறைவு நாளில் அதனைக் கொண்டாடுவது போல பழிவாங்கும் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்!

அதாவது புலிகளுடன் போராடுவது, அல்லது அவர்களை ஒடுக்குவது, அழிப்பது என்பதெல்லாம் தமிழர்களை அழிப்பது என்பது தான். இந்த வகையிலும், வடிவத்திலும் லட்சணத்திலும் தான் இராணுவத் தீர்வு அமையும்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் புறக்கணித்து அரசு இராணுவத் தீர்வை நாடுகிறது என்பதன் அர்த்தம் தமிழர்களை இன ஒழிப்பு (Genocide) செய்வதும் அவர்களை ஈழத்திலிருந்து பூண்டோடு அழித்து விடுவது (Annihilate) என்பதுமே ஆகும்.

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றலில் மாலை 6 மணி முதல் தெய்வீக இசையரங்கில் திரு. எம். வர்ணகுலசிங்கம். திரு வ. ராமேஸ்வரன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15— 6-15 "பீஷ்மர் சபதம்" எனும் பொருளில் கானசுதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் பிற்பகல் 2-3 மணி திரு. தி. பொன்னம்பலவாணர் "போதும் படரும் நல்லை" எனும் பொருளில் சமயச் சொற்பொழிவு. மாலை 5-6 மணி "ஈசருடன் ஞானமொழி பேசுமுகம்" எனும் பொருளில் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி கந்த புராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி — நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3—4-30 மணிவரை கந்தபுராண படனம்.

[ச-1 1-126]

## இன்று

அருட்தந்தை ஜி ஏ. பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் மணிவிழா இன்று புதன் மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் மணிவிழாவில் வாழ்த்துரையை கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் சிறப்புரையை பேராசிரியர் கா. சிவத்தம்பியும் வழங்குவார்.

"வட இலங்கைச் சிற்பிகை நகர்" நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்த விழா நாயகர் நயவுரை ஆற்றுவார். (ஒ-51)

o o o

சரசாலை இடம் பெயர்ந்தோர் முகாமில் இன்று புதன் கிழமை காலை 8 00மணிக்கு தொழு நோய் ஆய்வு நடத்தப்படும்.

சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் க. தா. சிவபாதம் தலைமையில் சுகாதார வெளிக்கள ஊழியர்கள் இவ்வாய்வினை மேற்கொள்வார்கள். (க-18)

## பாடசாலைகளில்

சுன்னாகம் கோத்தணிப் பாடசாலைகளின் ஆங்கில தின போட்டிகளும் பரிசளிப்பும் நாளை வியாழக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கோத்தணி அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (ச-152)

o o o

தென் புலோலி காந்தியூர் வீரபத்திரர் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் நடைபெறும். போருட் சமூக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி க. பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-173)

## கறுப்பு ஜூலை அனுஷ்டிப்பு

கறுப்பு ஜூலை தினத்தை குடாநாட்டில் நேற்று மக்கள் அனுஷ்டித்தனர்.

அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நேற்று கறுப்பு பட்டி அணிந்து காணப்பட்டனர். வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன. (த-5)

## இன்று கூட்டம்

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று, இன்று புதன்கிழமை 10 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நல்லூருக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாநகர சபைக்கு அண்மையில் புதிதாகக் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஜெனரேட்டர் மூலம் நல்லூர் கோவில் சுற்றாடலில் தற்சமயம் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலய மகோற்சவத்தை யொட்டி இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும்—

தற்போதைய அந்த பரீட்சார்த்த முயற்சியை சுற்றாடலில் உள்ள தடை முகாம்கள் உட்பட்ட கோவில் சூழல் முழுவதுக்கும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் யாழ். மாநகர சபை மின் பொறியியலாளர் திரு. நவரத்தினராசா தெரிவித்தார். (உ-5)

## தாய் சொல் கேட்காதது நியாயம் என்கிறார் அனுரா!

கொழும்பு, ஜூலை 28

ஹொரகொல்லையில் உள்ள — தனது தந்தையார் பண்டாரநாயக்காவின் சமாதிக்கு—முன்னால் தமது ஆதரவாளர்களுடன் கடந்த சனியன்று சுமார் ஐந்து நிமிட நேரம் அனுரா பண்டாரநாயக்கா சத்தியாக்கிரகம் செய்தார்.

அதன்பின்னர் அங்கு பேசுகையில் அவர் கூறியதாவது:

தமது தந்தை எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா உயிருடனிருந்தால் தம்மைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்திருக்கமாட்டார் என்றும் அவர் கூறினார்.

"என்னை 'சொல்கேளாத— கீழ்ப்படியில்லாத — மகன்' என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

"இளவரசன் சித்தார்த்தன் தமது தந்தையின் சொல்லைக் கேட்டு நடந்திருந்தால் இன்று பௌத்த மதம் இருந்திருக்காது. தமது தந்தையின் ஆலோசனையை துட்டகைமுனு கேட்டுச் செயற்பட்டு இருந்தால் சிங்கள இனமே இன்று இருந்திருக்காது. அது போல என் பாட்டனார் சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவின் சொல்லைக் கேட்டு என் தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா நடந்திருந்தால் இன்று சுதந்திரக் கட்சி என்ற ஓர் அரசியல் அமைப்பு இருந்திருக்காது." என்று அனுரா கூறினார்.

"என்னைப் பொறுத்த வரையில் நான் கீழ்ப்படிவற்றவன் அல்லன். நான் எனது மனசாட்சிப்படியே நடக்கின்றேன்" — என்றும் அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சியில் இப்போது நிலவும் நெருக்கடி ரத்வத்தைகளுக்கும் பண்டாரநாயக்காக்களுக்கிடையேயானது என்றும் அவர் கூறினார்.

ரோஸ்மீட் பிளேஸில் இருந்து ஹொரகொல்லைக்கு அனுரா சென்ற போது அவருடன் ஒன்பது சுதந்திரக் கட்சி எம்பிக்களும் சென்றனர்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ரணில் - மேற்றிராணியார் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுக் காலை கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண டாக்டர் நிக்கலஸ் மார்க்கஸ்பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேசினார்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள், சமாதானம், பந்தோபஸ்து ஆகியன பற்றி பிரதமர் அவருக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்றும் அவர் கூறினார்.

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்திசெய்ய துரித திட்டங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மேற்றிராணியார் வலியுறுத்தினார்.

இச்சந்திப்பின் போது துணை மேற்றிராணியார்களான அதி வண ஒஸ்வால்ட் ஜோமிஸ், மல்கம் ரஞ்சித் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். (ஒ-எ)

## தமிழ்க் குடும்பத்துக்கு ஆயிரம் கோடி ரூபா!

### நஷ்ட ஈடாக வழங்கத் தீர்ப்பு

நியூயோர்க், ஜூலை 28

அமெரிக்கா — நியூஜேர்ஸி நகர வீதி ஒன்றில் இடம் பெற்ற பயங்கரக் கார் விபத்து ஒன்றில் சிக்கி படுகாயமடைந்த— இலங்கையை சேர்ந்த— சியாமளா திருநாயகம் (27 வயது) என்ற பெண்ணுக்கு நியூயோர்க் நகர நீதிமன்றம் ஒன்று 16 கோடி 39 லட்சம் அமெரிக்க டொலர் பணத்தை நஷ்ட ஈடாக வழங்கும்படி உத்தரவிட்டிருக்கிறது.

அப்பெண்ணின் கணவர் பேரின்பராகம் திருநாயகம் (வயது 35) துக்கு ஒரு கோடி 68 லட்சம் டொலரை நஷ்ட ஈடாக வழங்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

ஏழு வார கால விசாரணையின் பின்னர், இரண்டு நாட்களாக கலந்தாலோசனை நடத்தி ஜூரர் சபை இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படவுள்ளது. இவ்விபத்தில் மரணமடைந்த 21 வயதான இந்திரன் தியாகராஜா என்பவரின் குடும்பத்துக்கு 73 லட்சம் டொலர்களை நஷ்ட ஈடாக வழங்கும்படியும் உத்தரவிடப் பட்டுள்ளது.

இக் கார் விபத்து 1987 இல் இடம்பெற்றது. நியூயோர்க் நகர ஹோட்டல்களில் பணியாற்றி வந்த இலங்கையரின் 9 பேர் ஒரு காரில் வாஷிங்டன் நோக்கி வந்துகொண்டிருந்த போது, வீதியில் நின்றுகொண்டிருந்த 70 அடி நீள ட்ராக்டர் ட்ரெயிலருடன் அது மோதியது. ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த ஐவருக்கும் மொத்தமாக 19 கோடி 70 லட்சம் டொலரை (இலங்கை நாணயப்படி ஆயிரம் கோடி ரூபாவை) வழங்கவேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது.

தீர்ப்பின் முடிவில் முச்சக்கர வண்டியில் அமர்ந்த வண்ணம் கண்ணீர் மல்க சியாமளா திருநாயகம் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டார்.

திருமணமாகி எட்டு மாதங்கள் கழித்து இவர் இவ்விபத்தில் சிக்கினார். இவரது கணவரும் உடலின் ஒருபக்கம் செயலிழந்த நிலையில் வசித்து வருகின்றார்.

"இயல்பான வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் பணம் இருந்து என்ன பயன்?" — என்று சியாமளா தெரிவித்தார்.

அமெரிக்கச் சரித்திரத்திலேயே இவ்வளவு பெருந்தொகைப் பணம் நஷ்டஈடாக வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது. (உ-எ-3)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி

தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறிக்கு (93-94) விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு இதுவரை தோற்ற முடியாதவர்கள் நாளை மறுதினம் வெள்ளி பிற்பகல் 2 30 மணிக்கு உரிய ஆவணங்களுடன் யாழ். கல்வித் திணைக்களத்தில் சமுகம் அளிக்குமாறு கோரப் பட்டுள்ளது. (இ)

## பார்வையற்றோர் 50,000 பேர்

இலங்கையில் வாழும் கண் பார்வையற்றோர்களின் எண்ணிக்கை 50 ஆயிரம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலகில் 4 கோடிக்கு அதிகமானோர் கண்பார்வையிழந்தவர்களாக உள்ளனர்.

இலங்கையில் கண்பார்வை அற்றவர்களாக உள்ளவர்களில் எண்பது சதவீதமானோர் பார்வை இழப்பைத் தவிர்த்திருக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## இன்றைய கிரிக்கெட்

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் — 17 வயதுக்குட்பட்டோர் — கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் ஒன்று இன்று காலை 8.30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

இந்த ஆட்டத்தில் யாழ். இந்து அணியை எதிர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரி மோதும். [உ-20]

## ப. நோ. கூ. ச. கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 30 ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட விவசாய அபிவிருத்தி உரக் கொள்வனவு, மக்கள் வக்கிக் கடன் ஆகியன தொடர்பாக ஆலோசிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (இ-162)

## மாணவருக்கு ஆசீர்வாதம்

மானிப்பாய், ஜூலை 28

எதிர்வரும் ஆகஸ்ட் இரண்டாம் திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை மாணவர்களை ஆசீர்வதிக்கும் நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமயகுருமார் ஆகியோர் ஆசீர்வதிக்கும் பிரார்த்தனை நிகழ்ச்சி நாளை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் மருதனார்மடம் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

உ

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## விடிவு தாரும் ஐயா!

(எடுப்பு)

எமக்கொரு விடிவு தாரும் ஐயா - நாம்
தினந்தினம் நலியும் நிலையகற்றி

(தொடுப்பு)

உந்தனின் அடியவர் நாமல்லவோ - இந்த
மண்ணினில் எமதிடர் அறியலையோ
(எமக்கொரு )

(முடிப்பு)

அசுரரின் கொடுமையால் அல்லலுற்ற
அமரர்க்கு ஆதரவு அளித்தவனே
நல்லையின் நாதனாய்த் திகழ்பவனே
வல்லவனே வேல் கொண்டவனே
(எமக்கொரு...)

- நாயன்மார்க்கட்டு ப. மகேந்திரதாசன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. செயலர் பதவி: கூரே இராஜினாமா?

கொழும்பு, ஜூலை 28

அமைச்சர் சிரிசேன கூரே, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்யவிருக்கின்றார்.

முரண்பாடு காரணமாக பொதுச்செயலாளர் பதவியை அவர் ராஜினாமாச் செய்யப் போகிறார் என்று ஒரு தரப்பினர் கூறினாலும்—

புதிய பொதுச்செயலாளர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதிக்கு இடமளிக்கும் வகையிலேயே அவர் பதவி விலகுகின்றார் என்று இன்னொரு சாரார் கூறுகின்றனர்.

எனினும் அமைச்சராக அவர் தொடர்ந்து செயல்படுவார் என்றும்—

தற்போது வெளிநாடு சென்றுள்ள அவர் கொழும்பு திரும்பியதும் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் புதிய பொதுச் செயலாளராக மகாவலி அமைச்சர் காமினி அத்துக்கோறளை, வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, கட்சியின் உதவிச் செயலாளர் அநுரா ரத்தினாயக்கா, மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர் சுசில் முனசிங்கா ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று ''சண்டே ரைம்ஸ்'' தெரிவிக்கின்றது. (உ-எ)

## ஜனாதிபதி இடம் பெயர் சேவை:

# டி. பீ. பங்குபற்றாததற்கு சுகவீனம் காரணமாம்!

உடல் நலக் குறைவு காரணமாகவே ஜனாதிபதி விஜேதுங்கா, கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடந்த ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று என்றும்—

முதல் நாள் வியாழக்கிழமை களுத்துறையில் இடம்பெற்ற பௌத்தமத நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி, உடல் நலக் குறைவு காரணமாக இடைநடுவில் கொழும்பு திரும்பி இருந்தார் என்றும் ''சண்டே ஒப்சேர்வர்'' செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

# நெவில் பெர்னாண்டோவின் பிரேரணை ஆகஸ்ட் 3இல்

கொழும்பு, ஜூலை 28

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதை அனுமதிக்கும் அரசியல் அமைப்பு திருத்தப் பிரேரணையை சுதந்திரக்கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ எதிர்வரும் 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கிறார். என்று கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

அரசியல் அமைப்பின் 99(13) ஆவது பிரிவை திருத்தக்கோரும் அந்தப் பிரேரணையை அன்று அவர் சமர்ப்பிப்பார் என்று சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது நாடாளுமன்றத்தில் உள்ள பல கட்சிகளின் ஆதரவு கிடைக்குமென தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# இலங்கை - இந்தியா கூட்டாக கடல் ரோந்து

## ஒப்பந்தம் செய்ய டில்லி ஆர்வம்

இந்து சமுத்திரத்திலும் வங்காள விரிகுடாவிலும் இலங்கையுடன் சேர்ந்து கடல் ரோந்து செய்வது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதில் இந்தியா ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரந்த கடலையும், நீளமான கரையோரத்தையும் கண்காணிப்பதற்கு போதுமான உபகரணங்களை இலங்கைக் கடற்படை கொண்டிருக்கவில்லை என்பதால்—

இலங்கைக்குள் ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கு இந்திய கடற்படை கண்காணிப்பிலேயே இலங்கை பெரிதும் தங்கியிருக்கிறது என்று 'இந்து' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது

கூட்டுக் கடல் ரோந்து சம்பந்தமான உடன்படிக்கையைச் செய்யவேண்டும் என்பதில் இந்தியாவே கூடுதலாக அக்கறை கொண்டுள்ளதாகவும் அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

அடுத்த மாத ஆரம்பத்தில் புதுடில்லியில் நடைபெற இருக்கும் இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழு கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட இருப்பதாகவும்—

அதற்காக இலங்கை கடற்படையின் பிரதித் தளபதியை இந்தியா அழைத்துள்ளது என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இக்கூட்டத்தில் பங்குபற்ற வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தலைமையில் குழு ஒன்று டில்லி செல்லவிருக்கிறது. (இ-8)


# கலை நிகழ்ச்சி

யாழ். வர்த்தக சங்கம்

சங்க வளர்ச்சிக்காக நடத்தும் **நிதியுதவி நிகழ்ச்சி**

இடம் : இளம் கலைஞர் மண்டபம் சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 07—08-93

நேரம்: மாலை 3.30 மணி முதல் இரவு 2 00 மணி வரை

பரதநாட்டியம்; செல்வன் எம். அருள்மோகன்

திருமதி சுகந்தினி தயாசிலன்

**சாந்தன் ராஜன்ஸ் குழுவினர்**

முதல் முறையாக ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

இன்னிசை கானங்கள்

31—07-93 நடைபெறவேண்டிய நிகழ்ச்சி

07—08-93 அன்று பிற்போடப்பட்டுள்ளது

வே. சிற்சபேசன்
தலைவர்

நா. த. அன்னலிங்கம்
செயலாளர்

வாழ்த்துபவர்:

**மகுடம் தளபாட நிலையம்**

315, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(26765)


# செஞ்சிலுவைக்கு எதிரான போக்கு

கொழும்பு, ஜூலை 28

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை இலங்கையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற கோஷம் தெற்கில் வலுவாகிறது.

அண்மையில் இங்கு நடைபெற்ற பௌத்த குருமார்—புத்தி ஜீவிகள் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் செயற்பாடுகளைப் பலரும் கடுமையாக விமர்சித்தனர்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள பொலீஸாரின் பெற்றோரை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்ற செஞ்சிலுவைக் குழு, அவர்களை கொழும்புக்குக் கூட்டி வருவதற்குத் தவறிவிட்டது என்று பலரும் சுட்டிக்காட்டினார்கள். (அ)

## நாளை

யாழ்ப்பாணம், ஜூலை. 28

யூனியன் கல்லூரி தமிழ் மன்றம நடத்தும் தமிழ் இலக்கண இலக்கிய நூல் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். (ந)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சகல வீடியோ, ஓடியோ ஒலிப்பதிவு நாடா உரிமையாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலகத்தில் (அரசியல் துறை) நடைபெறும். (க)

## குத்திக் கொண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடியாமல் போய்விட்டானே! எனக்கு மட்டும் எதற்கு வைத்தியம்? கடவுள் என் கணவரோடும், பேரனோடும் என்னையும் சாகடித்திருக்கலாமே'' என்று கூறிப் புலம்பியவாறு காணப்பட்டார்.

அவர் அழுதவாறே மேலும் தெரிவித்ததாவது:—

''பேரன் அஜித் பாடசாலைக்குப் புறப்படுமுன் தேநீர் தரும்படி கேட்டான். சுடுதண்ணீர் போத்தலில் தண்ணீர் இருக்கவில்லை. தண்ணீர் கொதிக்க வைத்து தேநீர் தாறேன் என்று பேரனிடம் கூறினேன்.

''அம்மம்மா நீங்கள் தேநீர் ஊற்றுங்கோ நான் உடுப்புப் போட்டுக்கொண்டு வாறேன்'' என்று அஜித் கூறினான். நான் குசினிக்குள் நின்றபோது வெளியில் பெரும் சத்தம் கேட்டது.

அஜித் வெளியே போய்ப் பார்த்துவிட்டு ''அம்மம்மா ஓடி வாங்கோ சுப்பசொனிக் இங்கே தான் குத்திக்கொண்டு வருகிறது'' என்று கூறிமுடிப்பதற்குள் எங்கள் வீட்டின் மீது குண்டு ஒன்று வந்துவிழுந்தது.

''நான் வெளியே ஓடமுற்பட்டபோது வீடு இடிந்து விழுந்துகொண்டிருந்தது. வீட்டின் முன்னே நின்ற என் கணவர் சத்தமின்றி தடால் என விழுந்தார். என் கண் முன்னாலேயே துடிதுடித்து இறந்தார்.

''ஓடிப்போய் அவரது தலையை என் மடியில் தூக்கி வைத்தபோது அவரது உடம்பின் வலது பக்கமும், தலையும் சிதறிய நிலையில் காணப்பட்டன.

''எனது உடலிலும் காயங்கள் உண்டாகி இரத்தம் ஒடுவதை உணர்ந்தேன். திரும்பிப் பார்த்தேன். எதுவுமே தெரியாதவாறு புகை மண்டலமாக இருந்தது. மேலும் குண்டுகள் விழும் சத்தங்கள் கேட்டன.

''புகை மண்டலம் மேலே எழுந்ததும் எங்கள் வீடு தரைமட்டமாகக் கிடந்ததைக் கண்டேன். சுற்றாடல் வெறிச்சோடிக் காணப்பட்டது. சில நிமிட வேளையில் வந்தவர்கள் என்னை இங்கு கொண்டு வந்தனர். ஆஸ்பத்திரிக்கு வந்த பின்னர்தான் பேரன் அஜித்தும் இறந்துவிட்டதாக அறிந்தேன்'' — என்று தெரிவித்தார். (அ-15)

## தாய் சொல்...

[5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

மங்கள முனசிங்க, ஜினதாஸ நியதபால, எம். கே. டி. எஸ். குணவர்த்தனா, திலக் கருணாரத்னா, எஸ். ஏ. பி. பெரேரா, ஹேமகுமார நாணயக்கார, [illegible] ஜயசூரிய, [illegible] இஷாக், [illegible] அவர்கள் ஆவர்) (உ-எ)

# காரைநகரில் படையினரின் காவலரண் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

காரைநகர் தாம்பிலப்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

நேற்றுக் காலையும் காரைநகர் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இச்சம்பவத்தில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

விடுதலைப் புலிகளின் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து படையினர் கனோன் துப்பாக்கித் தாக்குதலை நடத்தினர்.

இதே வேளை—

பலாலிப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று அதிகாலை ஒரு மணி வரை படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் ஏழாலைப் பகுதியில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

[உ-5-16-71]

## தளபாட அன்பளிப்பு

கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இப்பகுதி மக்கள் பத்தாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானம்மா இராசையா

திருமதி ஞானம்மா இராசையா 23 07 93 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முதலித்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், நாகேஸ்வரன் (சுவிஸ்), ரோகிணீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான குகனேஸ்வரி, சிவனேஸ்வரி, கமலேஸ்வரி, செல்வனேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஞானபூரணம், இராசரத்தினம், அன்னம்மா, சிவபாக்கியம், அசுபதி, கைலாயநாதன் (உதவிக் காணி ஆணையாளர், செயலகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான இராசதுரை, குமாரலிங்கம் ஆகியோரின் சகோதரியும், யோகநாதன் (ஆசிரியர் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை), அருந்ததி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், அருண்ராஜ் (சுவிஸ்) மதூஷாவின் பேர்த்தியும், வயிரவப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், சோமசுந்தரம், மகாலிங்கம், திருமதி நா. செல்லையா ஆகியோரின் மைத்துனியும், இரத்தினம் - பூமாலை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.யோகநாதன்
(மருமகன்)

''இராசஞானபவன்'',
சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில்.

(26702)

## பரமலிங்கம் மணிவண்ணன்

பிரதம சிறைச்சாலை அதிகாரி S. K பரமலிங்கம், திருமதி கமலரஞ்சனி பரமலிங்கம் ஆகியோரின் அருமைப் புதல்வனும், பரியோவான் கல்லூரி உயர்தர மாணவனுமாகிய பாபு என்று அழைக்கப்படும் பரமலிங்கம் மணிவண்ணன் காலமாகிவிட்டார்.

இவர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளான மதிவதனி, மலர்விழி ஆகியோரின் அன்புச் சகோதரனும், S. K. மகாலிங்கம் ஆசிரியர் பரியோவான் கல்லூரி), S. K. சண்முகலிங்கம் (முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), பத்மரஞ்சனி கோபாலசிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை), சிறீரஞ்சனி ஆனந்தகுமாரசாமி [பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி], சத்தியரஞ்சனி ஜெயராஜா [பிரான்ஸ்] ஆகியோரின் பெறாமகனும், திருமதி இராசலட்சுமி ஐயாத்துரையின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28 - 07 - 93) பிற்பகல் 4 மணியளவில் காட்டுக்கந்தோர் ஒழுங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்!
S. K. பரமலிங்கம்
(தந்தை]

86/16 காட்டுக்கந்தோர் ஒழுங்கை
சுண்டிக்குளி.

## கந்தையா சண்முகநாதன் பாலச்சந்திரன் அஜித்

கல்வியங்காடு இராச வீதியைச் சேர்ந்த கந்தையா சண்முகநாதன் (பிரபல தேங்காய் வியாபாரி), பாலச்சந்திரன் அஜித் ஆகியோர் நேற்று (27 - 07 - 93) அகாலமரணமடைந்தனர்.

காலஞ்சென்ற சண்முகநாதன் —

நாயன்மார்கட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கணபதிப்பிள்ளை, திருமதி சிவபாக்கியம் யோகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், சத்தியநாதன் (தேங்காய் வியாபாரி, திருநெல்வேலி), ரஞ்சனாதேவி, சதானந்தன், சாந்தனாதேவி (கனடா), சிலோஜனாதேவி, ஸ்ரீநாதன் (ஜேர்மனி), வஸந்தனாதேவி U K), ரவீந்திரநாதன் (கனடா), ரெஜினாதேவி (கனடா), சுபத்திராதேவி (U.K) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புவனஇந்திரன் (கிதா ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), ஸ்ரீரங்கநாதன் (கனடா), ஜெகநாதன் (U K), பாலச்சந்திரன் (கனடா), பேரானந்தன் (கனடா), கமலநாதன் (U.K), கேதீஸ்வரி, யோகராணி, ஸ்ரீரஞ்சினி (ஜேர்மனி), சுதர்ஷினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

காலஞ்சென்ற அஜித் —

கந்தையா பாலச்சந்திரன் (ந.ப.நோ.கூ.ச. முன்னாள் ஊழியர்) — சிலோஜனாதேவி தம்பதியினரின் மூத்த புதல்வனும், டினோஜா, டனுசியா, கஜந் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவர்கள் இருவரதும் ஈமக்கிரியைகள் நேற்று பிற்பகல் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. புவன இந்திரன் (மரும[illegible]
ச. சத்தியநாதன் (மக[illegible]

இராச வீதி,
கல்வியங்காடு.

(26

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலுள்ள அச்சகத்தில் 28-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org